**கடலூர் வனக்கோட்ட மாவட்ட வன அலுவலர் அவர்களின் செயல் முறைகள்**
**முன்னிலை: திரு.அபிஷேக் தோமர், இ.வ..ப..,**
**மாவட்ட வன அலுவலர்.**

---

**செ.மு.ஆ.எண்.446/2017/ப** நாள்: 22 .07.2020

**பொருள்:** பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி நேரடி நியமனம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி II(A)-ன் மூலம் உதவியாளர்கள் வனத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை:** 1.அரசு செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை. க.எண்.60211/PSD-D/2018, நாள்: 01.11.2018.
2.முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை. ந.க.எண்.W137899/2018, நாள்:12.11.2018.
3.வனப்பாதுகாவலர், விழுப்புரம் மன்டலம், விழுப்புரம், ந.க.எண்.8236/2018/ப, நாள்:06.02.2019.
4. வனப்பாதுகாவலர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம், ந.க.எண்.8766/2019/ப, நாள்:29.01.2020. (பணியாணை எண்.04/2020/ப).
5.இவ்வலுவலக ந.க.எண்446/2017/ப, நாள்:21.02.2020.

****

**ஆணை:**

அரசாணை எண்.(MS) No.32 சுற்றுச்சூழல் மற்றும் வனம் (FR-2-II) துறை, நாள்:08.03.2019-ல் மாவட்ட வனஅலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு பார்வை (1)-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி II(A)-ன் மூலம் உதவியாளர்களாக நேரடி நியமனம் மூலம் வனத்துறையில் நியமனம் பெற தேர்வு செய்யப்பட்டு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டு, விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் மண்டல அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு பார்வை (4)-யில் காணும் கடிதத்தின் படி கடலூர் வனக்கோட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு பணிபுரியும் செல்வி.A.தெய்வநாயகி, உதவியாளர் மேற்காண் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் பத்தி 3-ல் தெரிவிக்கப்பட்டவாறு,

தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி-32 மற்றும் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 விதி-28(1)-ன்படி உதவியாளர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பணியில் சேர்ந்த நாள் 22.02.2019 முதல் பணியினை வரன்முறை செய்து தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்கள்.

**நிபந்தனைகள்:**

1. மூன்றாண்டுகள் தொடர்ந்து பணியாற்றுவதன் மூலம் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டும்.
2. தகுதிகாண் பருவ காலத்திற்குள் கீழ்கண்ட துறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

i) சார்நிலை பணியாளர்களுக்கான கணக்கு தேர்வு Part I.
ii) தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல்.
iii) தமிழ்நாடு வனவிதி தொகுப்பு பிரிவு 28-ல் நிர்ணயிக்கப்பட்ட துறை தேர்வுகள்.

3. பவானி சாகர் Civil Service Training Institute-ல் இரண்டு மாதம் அடிப்படை பயிற்சி.

மேற்காண் பணியாளரின் பணியினை வரன்முறை செய்து வழங்கப்படும் ஆணையானது 2014-15 மற்றும் 2015-16-ம் ஆண்டு தொகுதி II(A) தேர்வு குறித்து சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடுக்கப்பட்டு, நிலுவையிலுள்ள வழக்கின் மீது வழங்கப்படும் ஆணைக்குட்பட்டது என தெரிவிக்கலாகிறது.

22/09/20

மாவட்ட வன அலுவலர்,
கடலூர் வனக்கோட்டம்(கூ/பொ),
கடலூர்.

**பெறுநர்**

1. செல்வி.A.தெய்வநாயகி, உதவியாளர்.
மாவட்ட வனஅலுவலகம்,
கடலூர் வனக்கோட்டம்,
கடலூர்.

**நகல்:** வனப்பாதுகாவலர், விழுப்புரம் மண்டலம், விழுப்புரம் அவர்களுக்கு வனப்பாதுகாவலர், ந.க.எண். 8236/2018/ப, நாள்:22.02.2019 தொடர்பாக தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
**நகல்:** தனியரது பணிப்பதிவேடு.
**நகல்:** செயல்முறை ஆணை தொகுப்பு.